சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞ (1889 ஆவணி மீ 23-ந் திக

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் - 94 ] யாழ்ப்பாணம்:- துந்துபி ஞல, மார்கழி மீ 7-1-1983 வெள்ளிக்கிழமை [இல - 13

University of Jaffna Sri
RECEIVED
Periodicals Division
Library

இரவி எழுந்திட மகர இராசியில்

# ஏரின் உழவர் ஏற்றுவர் அக்கினி

## புது நெல்லின் பொலிவு கண்டு புது அரிசியிற் பொங்கல்

## இன்னல் என்னும் இருட்கணம் அகன்றிடும்

இயற்கையின் எழிற்கதிர் வலத்தில் இயங்கும் யாவும் இந்த இரகசிய ஆற்றலை உள்ளவாறுணர்ந்து ஏற்றபடி பயன்படுத்த ஆறறிவுப்பேறுடைய மானிடர்க்கு நன்கு முடியும். ஆனால் மனிதனோ 'வெள்ளத்தில் நாவற்றியாங்கு' ஆன முதலைப் பேணி அமைக்க இயலாது தடுமாறுகின்றான். எனவே இன்பத்தினிடத்திலே துன்பம்; மகிழ்ச்சியைத் தருவது வெகுட்சி.

முன்னோர் வாழ்க்கை முறையை நன்கு வகுத்து இயற்கையின் போக்குடன் இயைந்து ஒவ்வொரு பருவத்துக்கும் ஒப்பான கருமங்களை ஆற்றி உள்ளம் பூரித்தனர்; உண்மையை உணர்ந்தவர் உய்த்தனர்.

பின்னோர் ஏகப்பிரமம் பிடித்து அந்த முன்னோர் வழி முயல முடியாமல் அல்லற்படுகின்றனர். ஆனால் பழமை ஒன்று உண்டு என்றுமட்டும் எண்ணி வைபவங்களை நிகழ்த்துகின்றனர் நெறியறியாமல்.

தைத் திங்கள் என்றதான் உதயமாகுமோ என்று முன்னோர் வழிமேல் விழி வைத்துப் பார்த்திருப்பர்; உத்தராயண உதய சூரியனுக்கு வரவேற்பளிக்கத் திரிகரண சுத்தியுடன் முயன்ற வண்ணம் கருமம் ஆற்றுவர்.

சங்கிராந்தியை எதிர்பார்த்திருக்கும் ஏரின் உழவர் மங்கள நாள் வந்ததும் அமுது, முக்கனி, பால், நெய் இவையெலாம் ஒருங்கமைய உழைப்பின் விளைந்த ஒப்பில் அரிசியை அவ்வாறு உழைப்பின் அமைந்த பானையில் உரிய கிரியைகள் ஆற்றிப் பொங்கற் கருமம் மேற்கொள்வர். — —

உ

### சிலாபம் - உடப்பு அருள் மிகு தேவி ஸ்ரீ வீர பத்திரகாளி அம்மன் மகாகும்பாபிடேகம்

--•o•--

ஈழத்தின் புராதன சிவாலயங்களுள் ஒன்றான முன்னேஸ்வரத்திருத்தலம் அமைந்திருக்கும் சிலாபத்திலே, உடப்புக் கிராமத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் அருள் மிகு தேவி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் திங்கட்கிழமை [31-1-83] ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

### மழைப்பதிக பாராயணம்

——

யாழ். நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜ ராசேஸ்வரியம்பாள் (பேய்ச்சியம்பாள்) ஆலயத்தில் இன்றும் நாளையும் (7, 8-1-83) வெள்ளி, சனி) இரவு 7 மணி முதல் மழைப்பதிகம் பாராயணம் நடைபெறும். யாழ், சைவசமய அபிவிருத்திக் கழகமும், அகில இலங்கைத் திருமுறை மன்றமும் இணைந்து நடாத்தவுள்ளன.

உ

### கந்தபுராணப் பூர்த்திப் படிப்பு

யாழ். சைவ பரிபாலன சபை ஆதரவில் நடைபெற்று வருகின்ற கந்தபுராண படனத்தின் பூர்த்திப் படிப்பு எதிர்வரும் (12-1-83) புதன்கிழமை பிற்பகல் 3 மணி முதல் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இதையுணர்ந்து சைவாபிமானிகள் யாவரும் படிப்பிற் பங்குபற்றிச் சிறப்பிப்பார்களாக.

மு.மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.

த. சண்முகலிங்கம்
கௌரவ காரியதரிசி;

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 4-1-83.

## திருவாசகத் திருமுறைகள்

# முழுமையும் ஓதும் விழா

### நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நனி சிறக்க நிகழ்ந்தது

[ சித்தாந்த சிரோமணி திரு. மு. மயில்வாகனம் அவர்கள் ]

சைவத் திருமுறைகளுள் ஒன்றாகிய உள்ளம் உருக்கும் திருவாசகப் பாசுரங்கள் அனைத்தையும் பக்திசிரத்தையோடு ஓதுங்கைங்கரியத்தை 1-1-1983 சனிக்கிழமையும், 2-1-83 ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் தமது நீராவியடி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பல சைவப்பெரியார்கள் வித்துவான்கள் உதவியால் பக்திபூர்வமாகச் செய்து முடித்தனர்.

நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முதலாம்நாள் நிகழ்ச்சியைப் பூசையுடன் ஆரம்பித்துவைத்து அருள் ஆசியுரை வழங்கினார். சிவபெருமானுக்கும் சமயகுரவர் நால்வருக்கும் திருவாசகத்துக்கும் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்றன. அதையடுத்து திருவாசகம் ஓதும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

புராணபடனவித்தகர் சி. தம்பிஐயா, வித்துவான் சி. ஆறுமுகம், திருப்பூங்குடி வி. வ. கே. ஆறுமுகம், யாழ். இந்து முன்னாள் அதிபர் திரு. இ. சபாலிங்கம் பண்ணிசைமணி க. சிவஞானம் தொழிற் திணைக்கள உத்தியோகத்தர் திரு. ம. நமசிவாயம் தொண்டர் V. S. ஜரின்பாயம், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திரு. க. மகேசன் கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம் முதலாகச் சைவப் பெரியார்கள் பலர் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பக்திபூர்வமான சூழலில் ஆத்மானந்தப் பெருக்கினை மறக்க இயலாச் சிறப்புடையது, இப் பாராயணத்தில் யாழ். சைவ மகளிர் மன்றமும்

(வளர்ச்சி 3ம் பக்கம்)

இணுவில் கந்தசுவாமி கோயில்
ஒரு நூற்றாண்டுக் கலைப்பொக்கிஷமான
அற்புதச் சிற்பங்கள் அலங்கரிக்கும்

# பழம் பெரும் மஞ்சம்

———0———

இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தென்னிந்திய விஸ்வகர்மாக்களால் ஆக்கப்பட்டு ஆறுமுகப்பெருமானின் திருவுலாப் பவனிப் பாவனையிலிருந்து வந்த இணுவில் கந்தசுவாமிகோவிலின் திருமஞ்சம் இப்பொழுது புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

அன்று அருள் சிந்துக்கள் ஒலித்தவரும் பெரிய சந்நியாசியார் என்று இணுவை மக்களால் பக்தி சிரத்தையோடு ஏத்தப்பட்டவருமான ஒரு மகான் முருகவடியார்களின் உதவியோடு முன்னின்று உருவாக்கி வைத்த இத்திரு மஞ்சம் பற்றிய அற்புதக் கதைகள் இன்றும் ஊர் மக்களிடையே வழங்கா நிற்கின்றன.

இத்திருமஞ்சத் திருப்பணியின் நிகழ்வுகளாக விளங்கிய இடம் இன்று இணுவிலின் மகோற்சவங்கள் நடைபெறும் ஐந்து கோயில்களுள் ஒன்றான மஞ்சத்தடி அருணகிரிநாதசுப்பிரமணியர் ஆலயமாக வளர்ச்சியுற்றுள்ளதிலிருந்தே இத்திருமஞ்சத்தின் அருமைத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

சைவஉலகில் மஞ்சத்திருவிழாவே தொடங்கியது இந்த மஞ்சத்தொடுதான் என நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் அவர்களால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட பெருமையும் இம் மஞ்சத்துக்கு உண்டு.

ஐம்பது இலட்சம் உத்தேசப்பெறுமதி கொண்ட இத் திருமஞ்சத்தைப் புன

வளர்ச்சி 3ம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ
ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு
மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

துந்துபி ஞ மார்கழி மீ
7- 1 - 1983 வெள்ளி

## சிந்திக்க வைக்கும் அமெரிக்க சிவனடியார்

கீற்றுப்பிறைச் சடைமுடியும் கண்டிகையும் நெற்றித் திலகமும் பற்றறுக்கும் சின்னமாம் திருநீற்றின் வெண் பொலிவும் தாழ் வடமும் சாந்த நிலைச் சின்னமாம் வெண்தாடியும் காவியுடையும் அருட் பொலிவின் பூத்த புன்சிரிப்பும் இவை யாவும் சிவமயமே என்று எடுத்துக் காட்டி விளங்க வைப்பவர்போல அமெரிக்க மேதாவி சுவாமி சிவாய சுப்பிரமுனியப் பெருந்தகையும் அந்தபோதனரின் ஆச்சிரம அடியவர்கள் நாற்பதின்மரும் சிவப் படையாகச் செந்தமிழ்ச் சைவத் திருநாடாம் நாவலர் நாட்டில் யாத்திரிகர்களாக மூன்றாவது முறையாகச் சென்ற புதன் கிழமை தரிசனம் கொடுத்ததை நேரிற் காணும் பாக்கியம் படைத்தவர்கள் சிந்தனையில் இக்கவினுர் காட்சி என்றும் நிலவிய வண்ணம் இருக்கும்.

சிவ சின்னங்களின் தெய்வீக மந்திர சக்தியைப் பற்றி உலகம் குறிப்பாகச் சைவ உலகமே மறந்து போகும் இவ் வேளையில் உண்மைச் சிவனடியார்கள் இருக்கின்றார்கள் அவர்களும் உலகில் வேறேர் பாகங்களில் உள்ளவர்கள் என்பதை உணர வைக்கும் வைபவத்தைச் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் இந்நாட்டு மக்களுக்கு அமுதமாக எடுத்துக் காட்டும் இந்த நீர்மையைச் சற்று உற்று சிந்திக்க வேண்டியவர்கள் நாங்கள் அனைவரும்,

திருச்சிற்றம்பலம்

நந்தி நாமம் நமச்சிவாயவெனும்
சந்தையால் தமிழ் ஞான
சம்பந்தன் சொல்
சிந்தை யால் மகிழ்ந் தேத்த
வல்லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல்லார்களே,
திருச்சிற்றம்பலம்

அந்நாளிலே அந்த அருட் குரவர்கள் பின்னாளில் நாவலர் பெருமான், இந் நாளில் இந்த சிவாய சுப்பிர முனிய முனிவர் என்ற வரிசையும் எங்கள் எண்ணத்தில் எழுகின்றது.

பூசுவது வெண்ணீறு, ஓதும் நாமம், நமச்சிவாய, பேசுவது ஈசன் புகழ், புரிவது அறம் – இது தான் சைவம்

வையகம் துயர் தீர்க அரன் நாமமே சூழ்க என்று தான் சைவ சித்தாந்தத் திருச்சபை ஆதீன மகா சந்நிதானம் அவர்கள் அறி

வுரை ஆற்றுகின்றனர் அறவுரை இதனை நாம் அறியமாட்டோமா?

புண்ணியர் பூசும் வெண்ணீறு பொருத்தமான தென்ற சம்பந்தப் பெருமானின் அருள் வாக்கை அழகாக எடுத்துக்காட்டுகின்றனர் அமெரிக்க நாட்டிலிருந்து வந்த மெய்யடியார்கள் 'பால் உளதாக வெண்ணெய்க்கு அப்பால் உள்ள இடங்களுக்குச் சென்று அலைபவர்கள் போல இங்கு நாம் அல்லற் படுகின்றோம்.

நால்வர் நெறியில் நின்ற நாவலர் நற்றலைகயார் சைவப்பாலிலே சனதன தர்ம வெண்ணெய் எடுத்துக் காட்டி அமுதம் புசிக்க எமக்குத் தந்தமைந்தனர். அந்தச் சிரிய அருந்தொண்டினை இந்தச் சிவாய முனிவர் இன்று பணியாகக் கொண்டுள்ளனர்.

பழங்கதை பேசி வாழ்க்கை முழுவதையும் வீணாக்கும் பழக்கத்தைக் கை விட்டு விளங்கு சைவ மேன்மையை யுணர்ந்து மெய்ம்மை அறிந்து வாழவாங்கு வாழ இந்த அந்நிய நாட்டு அறிஞர் குழாமாம் அடியார் கூட்டத்தின் அரும்பணியைத் தொடர்ந்து நாங்கள் செயற்படுதல் அன்றி வேறு உய்வதற்கு வழி இல்லை.

## இருள்மலம் போக்க அருட்கதிர் நோக்கு

கதிரவனைக் கண்டு காரிருள் கலையும், செம்மை இருக்கும் இடத்தில் கருமை இடம்பெறாது. இவ்வுண்மையை எப்பொழுதும் இவ்வுலகில் நாம் எங் கண்முன் காண்கின்றோம்.

கதிதரும் கதிரவன் யார்? கண்ணுதற் கடவுளின் ஆற்றல்தான் என்ற உண்மையை நோக்கின் இரவிக்கமைக்கும் அமுதா இறைவனுக்காகும் என்ற உண்மை விளங்கும்,

சிவ சூரியனென்றே இக்கத் தினகரனைத் தியானிப்பர் சைவ சமயிகள். அருணன் இந்திரன் திசை அணுகும் அமையம் எங்கள் உள்ளக் கமலமும் அலரும், அருளைப் பெற ஆங்கு நோக்கி அரனை வணங்குவது சைவநெறி. உத்தராயணம் ஓர் உத்தம காலம். தைத்திங்கள் சித்திபெய்த வைக்கும் என்ற நம்பிக்கையைப் பிறப்பிக்கும் பருவம். இந்த உன்னத எழில் அமைய இருக்கும் வேளையில் இறைவனுக்கு இரவியை நோக்கி எம்மை அர்ப்பணிக்கும் நிகழ்ச்சியே தைப் பொங்கல். உதயமலையின் உச்சிக் கண்ணின்ற செங்கதிரோன் எழுதலும் குவிந்த எங்கள் இதயமும் மலரும். அந்த அருமையான வேளையிலே அவன் அருளை வேண்டி அறநெறிநின்று அடி பணிவோம் — அடிமை இருள் அகன்றிடவும் மிடியிலகவும் செம்மை விடியவும் பொங்கற் கருமம்செய்வோம். சூரிய துதி கருணை வீரியம் தரும், சேர்மையை

## நாவலர் சமய அறிவுப்போட்டி முடிவுகள்

தெல்லிப்பழை பாலஞானோதய சபையினரால் 6- 12- 82 திங்கட்கிழமை மாலை நாவலர் குருபூசை காசிவிநாயகர் தேவஸ்தானத்திலே சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குருபூசையை முன்னிட்டு 20- 11- 82ல் சமய அறிவுப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. குருபூசையின் இறுதியில் போட்டியில் சித்தி பெற்றோருக்குத் தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

பரிசு பெற்றோர் விபரம் பின்வருமாறு:—

3ம் வகுப்பு
இ. கிருஷ்ணமணி
க. கிரிசாந்தி
சி. ஒளிவளர்மதி
ம. சாந்திமலர்
த. இராதா
ச. ஜெயராசா

4ம் வகுப்பு
சி. சிவச்செல்வன்
நா. சுகிர்தன்
பொ. இராசேஸ்வரி
க. மஞ்சுளா

5. வகுப்பு
இ. ரமேஸ்குமார்
இ. ரகுநாதன்
ச. ஜெயசக்தி

6ம் வகுப்பு
இ. இராதாகிருஷ்ண
சு. கலைச்செல்வி

7ம் வகுப்பு
க. வனிதா

8ம் வகுப்பு
சி. கலாமதி
க. காமினி

## இன்னிசைவிரிவுரை

திருக்கேதீச்சரம் திருவாசக விழாவுக்கு வருகைதந்த தமிழக பேரிமார் சிவஸ்ரீ கோடிலிங்க சாஸ்திரிகள் யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீ பட்டாளி வைரவர் தேவஸ்தானத்தில் 8 ஆம் தேதி புதன்கிழமை இன்னிசை விரிவுரையாற்றினார். காசமிகவின் அருளுரை சிலம்பு, சோணாமலை ஆகிவவிடங்களில் நிகழும்

"எல்லா உயிரும் ஈசன் கோயில்"



பக்தர்: "எல்லா உயிரும் ஈசன் கோயில்" எனப் போற்றி வாழவேண்டும் என வாரியார்சுவாமிகள் கூறியிருக்கிறார் அம்மான்!

பத்தர்: 'அப்படி யென்றால் — கோழியும் ஒரு கோயில் — ஆடும்ஒரு ஆலய . இவற்றை உட்கொள்வோர் தங்கள் ஆலயத்திற்குள் வேறு ஆலயங்களையும் வைக்கின்றார்களோ! இந்த உண்மையை உணர்ந்த எந்த மனிதன் ஊன் உண்ண எண்ணுவான்'
— "நாயன்மார் - நாதன்"!

நிகழ்த்தும். செங்கதிர்ச் செல்வன் இங்கெமைக் காப்பான்.

பால்பொங்கிப் பானை பரிமளிக்கப் பற்றுடன்
பால் சுற்று நெல்விளை பாகுசேர் - சால் சிக
மத்தால் மலரமுது மக்கள்
வளம்பெருக்கும்
எத்தாலும் இன்பமெழு மே;

## தியானம் வலிவுற தெரியும் மெய்ப்பொருள்!

( சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தசர்மா, சுன்னாகம் )

[ 1-10-82 இதழின் வளர்ச்சி — 3. ]

அன்பாவாய்— ஆர் அமுதம் ஆவாய் அடியேனுக்கு இன்பாவாய்- எல்லாமும் நீ ஆவாய் பொன் பாவை கேள்வா!கனர் ஒளி என் கேசவனே-கேடிலிறி ஆள்வாய்க்கு அடியேன் நான் ஆள் அன்பாகிய கவர்ச்சிச் சக்தியினால் இன்பம் மக்கள் விலங்குகள் மரஞ் செடிகள் ஆகிய வேறுபாடின்றி பிரபஞ்சம் முழுவதிலும் நுகரப்படுகின்றது. இந்தக் காம இன்பத்தை மூலமாகக் கொண்டு பலவகைப் பட்ட வேறு இன்பங்களிலும் உயிர்களுக்கு நாட்டம் உண்டாகின்றது.

விலங்குகளைப் போலன்றி பகுத்தறிவு தலைப்பட்ட மக்களுக்கு மாத்திரம் இன்பத்திலே. தாரதம்மியஞானம் உதிக்கின்றது. உடலால் வரும் இன்பத்திலும் பார்க்க மனதினால் வரும் இன்பங்களில் அதிகமான தேட்டம் ஏற்படுகின்றது. பின்பு அறிவினாலும், அன்பினாலும் நல் ஒழுக்கத்தாலும் வரும் இன்பம் ஐம்பொறி இன்பங்களிலும் மேலானதென நாடிப் பெறுகின்றான். ஆனால் நாளடைவில் அதுவும் நிலையற்ற இன்பம் என உணர்ந்து. அழிவற்றதாய்- துன்பக் கலப்பற்ற தாய் உள்ள, அழியா ஆனந்தத்தை அநுபவிக்க வேண்டும் என்னும் ஆசையை அடைகின்றான் அத்துடன் எல்லாவற்றையும் அறிய வேண்டும் என்னும் இச்சையும் தோற்றப் பெறுகின்றான். இதனுல் அவன் இடையறாது முயற்சியிடுபட்டுக் கொண்டேயிருக்கின்றான். அதனால் தான் துக்கத்திலும்- அறியாமையிலும்- மரணத்திலும் மனிதனுக்கு பொறுப் புணர்வு இயல்பாகவே எழுகின்றது. இதனாலேயே ஞானிகள் கூறிய உபதேசம் பின்வருமாறு உளது "ஆன்மா எனும் மெய்ப்பொருளின் இயல்பானது ஸத்- சித்- ஆனந்தம்- அதாவது- உண்மை- அறிவு ஆகும் இதுவே நமக்கு ஆசையையும்- ஆற்றலையும் ஒருங்கே

( வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

## விபூதியின் விசேடமும் மேலான மகிமையும்

( திரு. மு. இளையதம்பி
– முப்பொருள் உண்மை விளக்க நூல் ஆசிரியர் )

சிவபெருமானை வழிபடுவோர் சைவ சமயத்தவராவர், சைவசமயத்தவர்கள் சிவ சின்னமாக விபூதியை நெற்றியிற் றரிக்கின்றார்கள் விபூதிஒருதெய்வீகப் பொருள்வட மொழியின் ஸ்ரீ விபூதி என்பதே தமிழிலே திருநீறு என்று அழைக்கப்படுகின்றது.

திருநீறு அணிந்தாற் போதாது, அதனைப் போற்றவேண்டும். பெரியோர்கள் விபூதியைத் தரும்போது வணங்கிப் பணிவுடன் பெற வேண்டும். வடக்கு முகமாகவோ அல்லது கிழக்கு முகமாகவோ இருந்து கொண்டு தரிக்க வேண்டும் அண்ணந்து 'சிவ சிவ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றாலும் தரித்தல் வேண்டும். ஒரு விரலால் தரித்தலாகாது. தலை நடுங்கிக் கொண்டும், கவிழ்ந்து கொண்டும் தரிக்கலாகாது. அசுத்த நிலத்தும். வழி நடக்கும் போதும், கிடக்கும் போதும் தரிக்கலாகாது.

சந்தியாவந்தனம் செய்யுங் காலத்திலும், சூரியோதயம் சூரிய அஸ்தமனம், ஸ்நானம் செய்த பின்னர், போசனத்துக்கு முன்னர் பின்னர். நித்திரைக்கு முன்னர் பின்னர் ஆகிய காலங்களிலே தவறாது தரித்தல் வேண்டும். சுவாமி முன்னும் சிவாக்கினி முன்னும் குரு முன்னும் சிவனடியார் முன்னும் முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும். விபூதியை உத்தூளனமாக அல்லது திரிபுண்டரமாகத் தரிக்கலாம் திரிபுண்டரம் என்பது மூன்று குறியாகும். திரிபுண்டரம் வளையாமலும், இடையறுமலும், ஒன்றையொன்று தீண்டாமலும், இடைவெளி ஒரு அங்குல அளவினதாகத் தரித்தல் முறையாகும். தீட்சை பெற்றவர்கள் சந்தியா காலங்களிற் சலத்திற் குழைத்துத் தரிக்கலாம் மற்றைக்காலங்களில் சலத்திற் குழையாமலே தரித்தல் வேண்டும், தீட்சை பெறுதவர்கள் சலத்திற் குழையாமல் உத்தூளனமாகத் தரிக்கலாம்.

பசுவின் சாணத்தை அக்கினியினாற் சுட்டு உண்டாகிய திருநீற்றையே அணிய வேண்டும். வெண்ணிற விபூதியே சிறந்தது ஆலயங்களில் திருநீற்றை வாங்கி நெற்றியில் தரித்த பின்னர் எஞ்சியதைக் காற்றில் ஊதிவிடுவதோ, கையைத் தட்டிக் கீழே சிந்தி விடுவதோ, பக்கத்திலுள்ள தூண்கள் கதவுகள் மேல் உதறிவிடுவதோ குற்றமாகும். விபூதியைச் சிந்தலா

வளர்ச்சி 3 ம் பக்கம்

### நல்லை நகரில் - இசை மேதை

# கல்யாணராமனின் கானமழை

மார்கழித் திங்கள் ஐந்தாவது நாள் மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்தவரும் பிரபல கர்நாடக இசைப் பேராசானுமாகிய திரு. எஸ். கல்யாணராமனின் கானமழை வருண பகவானின் மழையுடன் போட்டியிட்டு இரசிகர்களைப் பேரானந்தத்திலே திளைக்கச் செய்தது. இரண்டரை மணித்தியாலத்திற்குச் சற்று மேலாக நடைபெற்ற நேர்த்தியான இன்னிசைக் கச்சேரி வெகு பிரமாதமாக இலங்கிற்று. மறைந்த பிரபல இசை மேதையான ஸ்ரீ என். பாலசுப்பிரமணியத்தின் பிரதம சிஷ்யர்களிலொருவரான கல்யாணராமனின் கச்சேரியிலே குருவின் இசைப் பாணி மட்டுமன்றி இவருக்கேயுரிய தனிச் சிறப்பான ரகமும் நன்கு தென்பட்டன.

பிள்ளையாருக்குரிய „மஹாகணபதிரவதுமாம்” என்று தொடங்கும் கீர்த்தனையுடன் கச்சேரி ஆரம்பித்தது. இச்சிறிய கீர்த்தனையின் அவர் இருபது நிமிடங்களுக்கு நேர்த்தியான பாணியில் இசைத்துச் சபையின் பாராட்டுக்களைப் பெற்றார். இத்துடன் கச்சேரி களை கட்டத் தொடங்கிற்று. தொடர்ந்து "நிரவதி சுகதா" எனத் தொடங்கும் தியாகராஜ கிருதி வெகு நேர்த்தியாக இசைக்கப்பட்டது. இதன் பின் கோதண்டராம எனும் கீர்த்தனம், ராகம், தானம், பல்லவி என்பனவும் சிறப்பாக இடம் பெற்றன. தொடர்ந்து "மனசலோனி" எனும் நேர்த்தியான தியாகராஜ கிருதியும் "கூவி அழைத்திட வருவான் குமரன்" எனும் தமிழ்க் கீர்த்தனமும், ஹிந்துஸ்தானி உருப்படி ஒன்றும் இடம் பெற்றன. திருப்புகழுடன் கச்சேரி இனிது முடிவுற்றது.

இசைப் பேராசானின் கம்பீரமான தோற்றமும், சிறந்த குரல் வளமும் நன்கு குறிப்பிடத்தக்கவை

பேராசிரியர்
க. சிவசாமி

கர்நாடக இசையின் பல நுணுக்கங்களும் வளமும் கச்சேரியிலே நன்கு மிளிர்ந்தன. நிரவல், கற்பனாஸ்வரங்கள், பாவரசங்கள், சஞ்சாரி பாவங்கள் மிக நிறைந்த கச்சேரி தனி ரகம் வாய்ந்து விளங்கிற்று. நேரம் போனதே தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் இத்தகைய கச்சேரிகள் குறைவாகவே நடக்கின்றன. ஒவ்வொரு கச்சேரி முடிவிலும் ஏற்பட்ட ரசிகர்களின் இயல்பான கரகோஷமும் கச்சேரியின் வெகு நேர்த்தியை நன்கு எடுத்துக் காட்டிற்று.

பக்கவாத்தியக்காரர்களில் மிருதங்கம் வாசித்த பிரபல வித்துவான் திருச்சி எஸ். சங்கரனின் மிருதங்க நாதம் கல்யாணராமனின் வாய்ப்பாட்டிசைக்கு மேலும் சிறப்பையும் புது மெருகையும் ஊட்டிற்று. ஒரு கட்டத்தில் இது வாய்ப்பாட்டிசைக் கச்சேரியோ, மிருதங்கக் கச்சேரியோ என்ற ஐயப்பாட்டினையும் ஏற்படுத்தியது போன்று காணப்பட்டது. மேலும் இக்கச்சேரிக்கான வயலினிசையினைத் திரு. ஆர். ராதாகிருஷ்ணனும், கஞ்சிராவைத் திரு. ஏ. சந்தானகிருஷ்ணனும் தம்புராவினைத் திருமதி. கு. கல்யாணராமனும் செல்வி. கு. குலசேகரமும் பொருத்தமாக இசைத்தனர். இச்சிறந்த இன்னிசைக் கச்சேரி இலவசமாகவே யாழ்ப்பாண நுண்கலைக் கழக ஆதரவிலே நடைபெற்றது. திரு எஸ். கல்யாணராமன் இராமநாதன் நுண்கலைப் பிரிவு இசையாசிரியையான செல்வி. குலபூஷணி குலசேகரம் அவர்களைச் சமீபத்திலே திருமணம் செய்துள்ளார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

சைவ நற்சிந்தனை

# உண்மை யாது - உத்தமன் யார்!

## இறைவனை நம்பினோர் கெடுவதில்லை

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி:

"உண்மை பேசி உத்தமனாக வாழ் என்று சொல்லக் கேட்டிருக்கின்றோம், இதில், எந்த உண்மையைப் பேசி எப்படி உத்தமனாக வாழ்வது என்பது நாம் சிந்திக்க வேண்டிய தொன்றாகும். உலகம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே சில வழிபாடும் தோன்றியது எனலாம். ஆகவே உலகத்துக்குக் கருத்தாவான சிவபெருமானை உண்மையாக நேசித்து, இறைவனைப் பற்றிய உண்மைகளை இடையறாது சிந்தித்துப் பேசி, மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களைச் செய்யாது உத்தமனாக வாழ்வதே நாம் செய்யக் கூடியதொன்றாகும்.

ஒரு நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்துக்குப் பல தூண்கள் இருக்கின்றன. பால வளைவுக்கு அடியில் ஒரு தூணுக்கு அருகில் நிற்கும் ஒருவனுக்கு மற்றத் தூண்களும் வளைவுகளும் தனக்கருகேயுள்ள தூணையும் வளைவையும் விடச் சிறியனவாகவே தோன்றும். இதே போல பக்தன் ஒருவனுக்கு தன் இஷ்ட தெய்வத்திடம் வைத்திருக்கும் அன்பு காரணமாக மற்றத் தெய்வங்களெல்லாம் தன் இஷ்ட தெய்வத்தை விடத் தாழ்வாகவே தோன்றும். தன் இஷ்ட தெய்வமே உயர்வாகத் தோன்றும். ஆனால் எல்லாத் தெய்வங்களும் ஒரே பிரம்மத்தின் பல தோற்றங்கள் என்பதே உண்மை. பாலத்தின் தூண்களெல்லாம் ஒரே மாதிரியாக ஒரே அளவில் கட்டப்பட்டவை தாமே. ஆகவே நாம் விரும்பும் இறைவனை உண்மையான பயபக்தியுடன் வழிபாடியற்ற வேண்டும். இறை வழிபாட்டுக்குச் சைவ சமயத்திலே கட்டுப்பாடுகள் சில உண்டு. அவற்றை நாம் கைக்கொள்ள வேண்டும்; அயல் வீட்டுத் தோட்டத்தில் மேயக்கூடாது என்பதற்காக நம் பசுவைக் கட்டி வைக்கின்றோம். அவர்களது பயிர் சேதமாகாது இருக்க வேண்டும் என்பதற்காக மட்டும் மாட்டைக் கட்டிவிடுவதில்லை, நமது பசு அடிபடாமல் இருக்கவேண்டும் என்றும் அதைக் காக்கவுமே நாங்கள் அதைக் கட்டி வைக்கின்றோம். இது போலவே எல்லாச் சமயக் கட்டுப்பாடுகளும் நாம் பிறருக்கு இன்னல் விளைக்காமல் காப்பாற்றுவதோடு நம்மை [illegible]ருந்தே காப்பாற்ற விதிக்கப்பட்டவை. எனவே நாங்கள் எவ்வளவு துன்பம் வந்தாலும் இறைவன் மீதுள்ள நம்பிக்கையைக் கைவிடக் கூடாது. துச்சாதனன் துகில் உரிந்த போது பாஞ்சாலியானவள் தனது கையினால் சேலையைப் பிடித்துக் கொண்டே "கண்ணா! கண்ணா!!" என்று கத்தினாள். கண்ணன் வரவில்லை. இறுதியில் இரண்டு கைகளையும் மேலே உயர்த்திக், "கண்ணா! மணிவண்ணா!! காப்பாற்று!!"என்று கத்தினாள். அப்பொழுது தான் கண்ணன் சேலை கொடுத்து உதவினான். முழு நம்பிக்கையுடன் முற்றாக நம்மை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். "எப்பவோ முடிந்த காரியம் என்ற யோகர் சுவாமிகள் கூற்றுப் போல் நம்மை நடத்துபவன் இறைவன். அவன் நடத்துகின்ற வழியே நாம் செல்வதே அவனது அருளைக் கொண்டுதான் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். பிறவிப் பிணி தீர்க்கும் வைத்திய நாதராகிய ஈசுவரனைப் பணிந்து இகபர சௌபாக்கியங்களைப் பெற்று இன்புற்று வாழ்வோமாக.

இளஞ்சைவப் புலவர் இ. ஸ்ரீதரன்

"நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு"

## திருவாசகத் திருமுறைகள்..

[1 ஆம் பக்கத்து வளர்ச்சி]

தாய்க்குலத்தவர் பலரும் பங்கெடுத்தனர். பல சைவ அறிஞர்களும், சைவசமயச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி பக்திபூர்வமாக நிறைவெய்தியதும் விசேடபூசை ஆராதனை நடைபெற்று பிரசாதம் வழங்கப்பெற்றது. ஆனந்த அருவி சொரிய 'இப் பாராயணம் ஆண்டுதோறும் இம் மண்டபத்தில் நடைபெற திருவருள் துணைநிற்கவேண்டுமெனப் பிரார்த்திப்பதாகக் கூறிய சபை உபதலைவர், பாடும் நற்பணியில் இருதினங்களிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினர். கலந்துகொண்ட சிவனடியார்களுக்கு மதியபோசன ஒழுங்கு செய்த சைவ அன்பர் பிரபல வர்த்தகப்பெருமகன் பொன்னம்பலம் அவர்களுக்கும் சபையின் உபதலைவர் இ. சபாலிங்கம் நன்றி நவின்றனர்.

'தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லல் அறுத்(து) ஆனந்தமாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகமென்னுந் தேன்.

## இராவணன் வலிவுற......

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

தருவது" எனக் கூறுவதாலுணர்க. நமக்குள் இருக்கும் சச்சிதானந்த வடிவான உண்மைப் பொருள் உள்ளே இருப்பது போலவே வெளியிலும் நிறைந்துளது ஆயினும் நாம் இதனைத் தெரிந்து கொள்ளவிடாது நமக்கு ஒரு மறைப்பு தடுத்துக் கொண்டேயிருக்கிறது.

(வளரும்)

## இணுவில் கந்தசுவாமி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருத்தாரணம் செய்து புத்துயிர் கொடுக்குந் திருப்பணியை ஏற்றுக்கொண்ட திருவிழா உபயகாரர்களான 'கல்கி' தொழிலதிபர் சி. சின்னத்துரையும் திரு. அ. இராசநாயகமும் அதனை வெற்றிகரமாக இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ரூபாய்கள் செலவில் புனருத்தாரணம் செய்துமுடிப்பதற்கு உள்ளூர்ப் பொது மக்களும், கொழும்பு வர்த்தகர்களும் பிற நாட்டுச் சைவர்களும் பெரும் ஆதரவு வழங்கினமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் தைப் பூசத் திருநாளன்று வெள்ளோட்டம் காண இருக்கும் இவ்வற்புதத் திருமஞ்சப் புனருத்தாரணப்பணியில் பொறுப்பாக நின்றுழைத்த குருபிள்ளை ஸ்ரீ அருளம்பல சுவாமியாரும், இணுவில் இளைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

— 'முருகனடிப்பொடி',

## விபூதியின் விசேட

(2ம் பக்க வளர்ச்சி)

காது மற்ற அடியார்களின் கால்களிற் படத்தக்கதாக நிலத்தில் விழவிடக் கூடாது. கோயில்களில் பெற்ற விபூதியை அணிந்து எஞ்சிய விபூதியை வீட்டிற்குப் பிரசாதமாக எடுத்துச் சென்று அங்குள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கோயில்களிலிருந்து வரும் பிரசாதங்களுள் விபூதிப் பிரசாதம் ஒன்றாகும். அதனை அன்புடனும் ஆவலுடனும் வாங்கி அணிய வேண்டும். பழனி திருச்செந்தூர், சிதம்பரம் முதலிய சேத்திரங்களிலிருந்து விபூதி கிடைக்கும் போது மனமானது இறைவனைச் சிந்திக்கச் செய்கிறது.

(வளரும்)

HINDU ORGAN

Fri. 7-1-83

### ANOTHER YEAR FOR ASPIRATION

From now onwards, everyone is the hope of new enthusiasm during a fresh period of twelve lunar months, would be aspiring to enjoy a better life and a freshening future

The month of January is doubly significant. The Christian World hails a New Year; a fortnight later the Saivaite World greets the ushering in of the Uththarayanam, a period of six months of solar revolution northward This latter occasion, however, assumes a wider significance for the simple reason that the cultivator pins his hope on a rich produce and offers poojahs and prayers to Providence and salutes Nature in the form of the ever resplendent Sun the source of brightness.

On the eve of this special occasion, people do ponder over the impact on them of the past and prepare themselves to devise ways and means of avoiding the pit falls they hadduring the previous period

One question all of us should ask ourselves is whether we have observed the code of conduct that our Religion has prescribed for us. Such an investigation will certainly reveal our weaknesses and put us to shame notwithstanding all that strength that stands to our credit by means or our good deeds.

Reflecting on past activities and happenings we will be able to assess the worth of our contribution to the general welfare Have we become useful to the world?; or in explanatorylanguage the enquiry would include the negative side where not merely our uselessness but also our detrimental doings would be in question.

We need not get discouraged by this detailed introspection as such an examination will always be to our advantage

Hence THAIPONGAL becomes a significant occasion for us to dedicate ourselves to better purposes and ensure for us and therefore for the world more pleasing prospects. The dedication of our Pongal Prasatham to Providence is a direct request for divine guidance in the future for us to tread in the footsteps of our Religious Teachers avoiding the perilous path of animosity and violence

# Swami Sri Subramuniya

## Symbol of Spiritual Serenity

**Here is a Holy man who, early in life, had such an inspired inner nature as to be capable of attracting the spiritual eye af another Holy Man of Saivaism basking in the sunshine of divine radiance. The Swami of serene Columbuturai was awaiting the arrival in his Ashram of an aspirant from far-away America and the disciple designate, did arrive there on time to be initiated into the secrecy of Sanatana Dharma. It was an incident that in the frequent saying of the Swamy — எப்பவோ முடிந்த காரியம் — had been already mapped out. Thus arrived the opportune moment for the American visitor to undertake a divine duty as a moral obligation to carry aloft the TORCH OF TRUTH across the different continents by rail, road, sea and air**

The performance of Saivite Services began with the American Pilgrim realizing the duty as a binding force of what is right. Hence-forward it has been a Pilgrim's progress, Since then Swami Subramuniya, ordained as such by that Swami of Swamis Yogar of Columbuturai, has been journeying to sacred places as act of religious devotion holding aloft the standard of Saivaism beckoning to those baffled by the confounding contradictions of religious tenets and calling attention of the SAIVAITE PATH

The spirit of Saivaite service has been growing in such solemnity that the Swami became inspired to found the Saiva Siddantha Church consecrating an Aatheenam in the congenial setting of hills and dales of a chain of Islands ,situated midway between the EAST and the WEST

The KADAVUL TEMPLE dedicated to the worship of GANAPATHY stands as the symbol of sincere Saiva auspicious service, This has been an ideal commencement for a chain of shrines to illumine the Western World, The lighted TORCH is being carried by a dedicated band of disciples to all climes, to keep knowledge alive,

the Swami has reproduced the most instructive works in Saiva Literature — THIRUMURAIS — THIRUMANTHIRAM AND THIRUKURAL, supplemented by a priceless periodical the "Saivaite World"

But the crowning glory of the Swamihood of this American Pilgrim is the founding of an Ashram in the homeland of his Holy Guru, Alaveddy Ashram is essentially an abode for true aspirants.

## The Jaffna Co-operative Stores Ltd.

**420, Hospital Road — Jaffna.**

WHEREAS the Legal Heirs of the late Mr. Kandiah Nadarajah of Vaddukoddai West, Vaddukoddai, have applied to the Directors of the above-named Company for the issue of a Duplicate Certificate in respect of One (1) Ordinary Share of Rs. 100/-, numbered: 1599, registered in the name of late Mr. Kandiah Nadarajah, the original of which is represented to have been destroyed, lost or mislaid; NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for Duplicate Certificate, the original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
7th, January. 1983. (15,82)

C. SRI MANOHARAN,
Secretary

## Reacting to the Referendum VERDICT

Reassessing the result of the referendum, we who were opposed to the holding of a plebiscite to extend the term of the present Parliament, however, wish to explore the possibilities of spotting some ray of hope that might reveal the need for the Government to take auxiliary steps which could meet the demands of the Opposition

Conceding that the Government has obtained the sanction of the people for extending the term of the present Parliament, we feel that the fact of the Opposition having secured a substantial support ought to pave the way for elections to be held in all electorates that had refused to endorse the proposal of a referendum.

The President, even in a mood of exultant enthusiasm, cannot gainsay the fact that certain electoral districts have totally rejected his call for an extension of the term of the present Parliament

The present Constitution is by no means a rigid one; it has been made flexible for the mere wish. A Fifth Amendment, if so devised as to respect the verdict of these dissident areas would be a popular one capable of giving the Government a helping hand.

To make our suggestion look sensible, it is imperative that the Members of Parliament who represent the electorates that echoed an emphatic No should immediately resign their seats, particularly those M. Ps of the Opposition

The Government Party also owes a duty to their political conscience. Those electorates of the Reigning Party that have failed to endrose the President's call for an answer in the affirmative certainty have expressed lack of confidence in their Representatives

Add to these by-elections the filling of the additional thirty eight seats according to the Re-delimitation Report. In such a new set-up the will of the people will stand expressed. And the Referendum would have served a useful purpose

In such circumstances a National Government will be meaningful. Development will then be a definite achievement

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K S. Road, Vannarponnai, Jaffna. (Telephone: No. 22336) on Friday, 7-1-83*

Editor in Chief:
R. N. Sivapirakasam

